# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# இரண்டாம் பத்து

## ஒன்பதாம் திருவாய்மொழி - எம்மாவீடு
## புருஷார்த்த நிஷ்கர்ஷம் பண்ணுதல்

** எம்மா வீட்டுத் திறமும் செப்பம் * நின்
செம்மா பாத பற்புத் * தலை சேர்த்து ஒல்லை **
கைம்மா துன்பம் * கடிந்த பிரானே! *
அம்மா! அடியேன் * வேண்டுவது ஈதே 1

ஈதே யான் உன்னைக் * கொள்வது எஞ்ஞான்றும் * என்
மை தோய் சோதி * மணிவண்ண! எந்தாய்! **
எய்தா நின் கழல் * யான் எய்த * ஞானக்
கை தா * காலக் கழிவு செய்யேலே 2

செய்யேல் தீ வினை என்று * அருள் செய்யும் * என்
கை ஆர் சக்கரக் * கண்ண பிரானே! **
ஐயார் கண்டம் அடைக்கிலும் * நின் கழல்
எய்யாது ஏத்த * அருள் செய் எனக்கே 3

எனக்கே ஆட்செய் * எக்காலத்தும் என்று * என்
மனக்கே வந்து * இடைவீடு இன்றி மன்னி **
தனக்கே ஆக * எனைக் கொள்ளும் ஈதே *
எனக்கே கண்ணனை * யான் கொள் சிறப்பே 4

சிறப்பில் வீடு * சுவர்க்க நரகம் *
இறப்பில் எய்துக * எய்தற்க ** யானும்
பிறப்பு இல் * பல் பிறவிப் பெருமானை *
மறப்பு ஒன்றின்றி * என்றும் மகிழ்வேனே 5

மகிழ் கொள் தெய்வம் * உலோகம் அலோகம் *
மகிழ் கொள் சோதி * மலர்ந்த அம்மானே! **
மகிழ் கொள் சிந்தை * சொல் செய்கை கொண்டு * என்றும்
மகிழ்வுற்று * உன்னை வணங்க வாராயே 6

வாராய் * உன் திருப்பாத மலர்க் கீழ் *
பேராதே யான் வந்து * அடையும்படி
தாராதாய்! ** உன்னை என்னுள் * வைப்பில் என்றும்
ஆராதாய்! * எனக்கு என்றும் எக்காலே 7

எக்காலத்து எந்தையாய் * என்னுள் மன்னில் * மற்று
எக்காலத்திலும் * யாதொன்றும் வேண்டேன் **
மிக்கார் வேத விமலர் * விழுங்கும் * என்
அக்காரக் கனியே! * உன்னை யானே 8

யானே என்னை * அறிய கிலாதே *
யானே என்தனதே * என்று இருந்தேன் **
யானே நீ * என் உடைமையும் நீயே *
வானே ஏத்தும் * எம் வானவர் ஏறே 9

ஏறேல் ஏழும் வென்று * ஏர் கொள் இலங்கையை *
நீறே செய்த * நெடுஞ்சுடர்ச் சோதி **
தேறேல் என்னை * உன் பொன்னடிச் சேர்த்து ஒல்லை *
வேறே போக * எஞ்ஞான்றும் விடலே 10

** விடலில் சக்கரத்து * அண்ணலை மேவல் *
விடலில் வண்குருகூர்ச் * சடகோபன் சொல் **
கெடலில் ஆயிரத்துள் * இவை பத்தும் *
கெடலில் வீடு செய்யும் * கிளர்வார்க்கே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---